மா.கா.ஆ/கா/11/ES அனுமதிப் பத்திரம் 2013.08.07

பிரதேச செயலாளர்

பிரதேச செயலாளர் காரியாலயம்

எல்லா களுத்துறை மாவட்ட பிரதேச செயலாளர்களுக்கும்.

## E.S. அனுமதிப் பத்திரம் உள்ள அரச காணிகளுக்காக நடவடிக்கை எடுப்பது தொடர்பான ஆலோசனைகள்

களுத்துறை மாவட்டத்தின் 1979 அங்கீகாரமற்ற கணக்கெடுப்பில் இனங்காணப்பட்ட E.S. அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட அங்கீகாரமற்றவர்கள் தொடர்பாக பின்வரும் ஆலோசனைகளைக் கடைப்பிடித்து எதிர்கால நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பின்வரும் செயற்பாடுகளை கடைப்பிடியுங்கள்

கட்டம் 1 :- E.S. அனுமதிப் பத்திர காணிகளின் தகவல்களைச் சேகரித்தல்

இத்துடன் காணப்படும் படிவத்திற்கு இணங்க கிராம உத்தியோகத்தரினால் துறை சார்ந்த தகவல்களை அறிவித்தல்.

கட்டம் 2 :- காணித் துறை சார்ந்த அதிகாரிகளினால் மாதிரிப் படிவத்தின் தகவல்களுக்கு இணங்க உரிய காணிகளை வர்க்கப்படுத்துதல் மற்றும் சிபார்சுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

2.1) 1979 கணக்கெடுப்புச் சந்தர்ப்பத்தில் உண்மையாக இனங்காணப்பட்ட நபர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள E.S. அனுமதிப் பத்திரம் கொண்ட காணிகள்

2.2) ஆரம்ப அனுமதிப் பத்திரதாரியின் துணைவன்/ துணைவி அல்லது மூன்றாவதாக அட்டவணைப் படுத்தப்பட்ட இரத்த உறவுகள் பயன் பெறும் காணி.

2.3) 2.1 மற்றும் 2.2 இற்கு உரியவர்கள் அல்லாது வெளி நபர்கள் வசிக்கும் / பயன் பெறும் காணி

(இங்கு 1985 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட E.S. அனுமதிப் பத்திரம் அல்லது அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட E.S. அனுமதிப் பத்திரத்தினை உண்மையாக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமாக கருதிக் கொள்ளுங்கள்,. காணியின் அபிவிருத்தி நிலமையினைக் கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானது)

கட்டம் 3 :- வர்க்கப்படுத்தப்பட்ட படிவம் தொடர்பாக ஒழுங்கான விசாரணை ஒன்றினை நடாத்துதல்.

கட்டம் 4 :- மேலே 3 ஆவது நடவடிக்கையின் போது உண்மையாக E.S. அனுமதிப் பத்திரதாரர்களாக இனங்காணப்பட்ட நபர்களுக்கு பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற முறையில் தீர்மானம் எடுப்பது சிறந்தது.

i. விவசாய வகுப்பு நபர்களுக்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 20 "அ" பிரிவின் கீழ் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டு அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல்.

ii. விவசாய வகுப்பு அற்ற . நபர்களுக்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 20 "அ" பிரிவின் கீழ் அங்கீகாரத்தினை வழங்கி கொள்வனவு செய்யும் விலையின் அறவிட்டு அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல்.

**கொள்வனவு செய்யும் விலையின் அறவிடுதல்** - E.S. அனுமதிப் பத்திம் வழங்கிய வருடத்திற்கு உரியதாக காணியின் மதிப்பீட்டு நிதியினைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். காணியின் மதிப்பீட்டு நிதியினை ஒரே முறையில் அல்லது பத்து தவணைக் கட்டணங்களில் அறவிட இயலும் . முதலாவது தவணைக் கட்டணத்தினை அறவிட்டு அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.மொத்த நிதியினைச் செலுத்தும் வரை உறுதியினை வழங்க முடியாது. மதிப்பீடு நிதியில் செலுத்தாது மீதமாகும் நிதிக்காக 10% வட்டி அறவிடப்படும்.

iii. வருடாந்த வருமானம் ரூபா 261,120.00 இனை விட அதிகமான நபர்களுக்காக அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட வேண்டும்.

கட்டம் 5 :- மேல் கூறப்பட்ட வர்க்கப் படுத்தலுக்குப் புறம்பான காணித் துண்டுகளுக்காக 2008.08.20 ஆந் திகதி காணி ஆணையாளரின் 2008/04 சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பது சிறந்தது.

ஈ.ஏ.ஆர்.ரேணுகா

மாகாண காணி ஆணையாளர்

மேல் மாகாணம்

பிரதி-

I. காணி ஆணையாளர் நாயகம் - தயவு செய்து அறியும் பொருட்டு.
II. மாவட்ட செயலாளர், களுத்துறை - தயவு செய்து அறியும் பொருட்டு.
III. செயலாளர், மாகாண காணி அமைச்சு (மே.மா) - தயவு செய்து அறியும் பொருட்டு.